# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ. வெ. ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 11 கற்பனை 8] திருச்சி 15—8—68 [ தனிப் பிரதி 25 காசு


திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க மாநாட்டில்

# "அவலம்"

[அயிலைத் தமிழ்ச்செழியன்]

ஒன்பான் சுவையின் உணர்வதிலே
ஒன்றிப் போன நற்றலைவ
அன்பால் அமர்ந்து கவிதையிலே
ஆர்வம் காட்டும் மன்றத்தீர்

புவியைப் புதிதாய் மாற்றுதற்குப்
புறப்பட் டுள்ள குயிற்குலமே
கவிஞன் அயிலைத் தமிழ்ச்செழியன்
கரங்கள் கூப்பி வணங்குகிறேன்.

அழுதே பிறந்தேன் பின்னும்
அழுதே வளர்ந்தேன் வாழ்வெல்லாம்
அழுதே வாழ்ந்தேன் ஆமையா
அழவே படைத்தான் இறைவனெனை.

வந்து குவியும் துயரத்தால்
வாழ்க்கை முழுதும் போராடி
வெந்து குமையும் மானிடர்தாம்
விதியின் பிடிப்பிற் சிக்குண்டு
சிந்தும் கண்ணீர்த் துளிகண்டு
சித்தம் உருகி மனமிரங்கி
நைந்து நைந்து நானழுவேன்
நானோர் கவிஞன் ஆதலினால்.

வாழும் இந்தச் சமுதாயம்
வளர்க்கும் சாதிப் பிரிவாலே
தாழும் நினைவை முன்வைத்துத்
தானே பலியாய் வீழ்கின்ற

பாழும் நிலைமைக் கோலத்தை
பார்க்கும் போது நெஞ்சத்தில்
சூழும் துயரம் அதையிங்கே
சொல்லிச் சொல்லி அழுகின்றேன்.

தாய்மை அன்பு தவழ்பாசம்
தம்பி அண்ணன் உறவுமுறை
தூய்மை நிறைந்த பெருவாழ்க்கை
சூழ்ந்தார்க் குதவும் நற்பண்பு
வாய்மை நேர்மை என்பதெலாம்
வயிற்றின் முன்னே சரணடையும்
தேய்வைப் பார்த்துப் பார்த்துத்தான்
தேம்பித் தேம்பி அழுகின்றேன்.

மெய்யை மதியார் பாவியவர்
மேலோன் றறியார் கண்கண்ட
பொய்யைப் போற்றத் தலைப்பட்ட
போக்கைக் கண்டே அழுகின்றேன்.

வட்டிக் கடையில் கடன்பாக்கி
வாங்கும் பாலோ பழம்பாக்கி
பெட்டிக் கடையில் நெடும்பாக்கி
பேசும் தொகையோ பெரும்பாக்கி
தொட்டுத் தொடரும் இவையெல்லாம்
துளைக்கத் துடிக்கும் துப்பாக்கி
ஒட்டிக் கிடக்கும் உடலதிலே
ஒன்றே ஒன்றும் உயிர்பாக்கி.

தானே தனக்குச் சுமையாகித்
தாங்கும் வலிவொன் றற்றூர்க்கு
நானே நீயே என்றுவரும்
நாலுஞ் சுமையாய்ச் சேர்ந்துவிட
மீனே போலத் துடிப்பாரை
மீட்டும் மீட்டும் பார்க்கையிலே
தானே கலங்கும் கண்களுடன்
தயங்கித் தயங்கி நானழுதேன்.

கொல்லும் பசியாற் துடிப்பார்க்குக்
குடிக்கக் கூழும் கிடைக்கவில்லை
செல்வம் பலவும் படைத்தார்க்குச்
சிறிதும் பசியே இருக்கவில்லை.

வந்த பசிமுன் அவனழுதான்
வருமா பசியென் றிவனழுதான்
வெந்தே துடிக்கும் நெஞ்சத்தின்
வேகத் தாலே நானழுதேன்.

ஊரை ஏய்ப்போன் பெரும்புள்ளி
ஒழுங்கை மதிப்போன் ஏமாளி
சீரைச் செயலைச் சிந்திக்கும்
செம்மைக் கிங்கே சாக்காடு
பேரைப் பெரிதாய் நிலைநாட்ட
பிச்சை இடுவோன் கொடைவள்ளல்
ஆரைச் சொல்லி நோகட்டும்
அம்மா அம்மா அம்மம்மா.

வருவாய் குறைந்த வீட்டினிலே
வரவாய் இருக்கும் பலபிள்ளை
ஒருவாய் இருவாய் எனப்பலவாய்
உண்ணச் சோற்றை உடனடியாய்த்
தருவாய் தருவாய் எனக்கேட்டுத்
தவித்தே துடிக்கும் பிள்ளைகள்முன்
கருவிற் சுமந்தாள் மனங்குமுறும்
காணும் எனக்கோ கண்கலங்கும்.

ஓலம் படைக்கும் மானுடத்தின்
உள்ளக் குரலைத் தாங்கிவரும்
காலம் காட்டும் காட்சியெலாம்
கண்ணீர் கண்ணீர் கண்ணீரே.

இல்லாக் கொடுமை அந்தந்தோ
ஏலாக் கொடுமை அப்பப்பா
சொல்லாக் கொடுமை ஒருகோடி
சூழும் துயரம் பலகோடி
பொல்லாக் காலம் இக்காலம்
போதாக் காலம் ஆமிங்கே
எல்லாம் கொடுமை என்பார்தம்
இதயம் பார்த்து நானழுதேன்

கூடிக் கூடிக் கெடுக்கின்ற
கூடா நண்பர் கூட்டுறவால்
வாடித் துடிக்கும் இதயத்தின்
வாட்டம் கண்டே நானழுதேன்.

உயிர்கள் அனைத்தும் ஒற்றுமையாய்
உயரும் அன்பில் சமத்துவமாய்
வயிறும் வாயும் வாழ்த்துவதாய்
வாழும் வாழ்க்கை வரவேண்டும்.

கற்றோர் கல்லார் கைதொட்டுக்
காக்குஞ் செல்வம் பற்பலவும்
பெற்றூர் அற்றூர் என்றுவரும்
பேதம் நீங்கும் வழிவேண்டும்.

உழைப்போன் கைகள் உயரட்டும்
உலகை அவனே வாழ்விப்பான்
அழைப்போம் நன்னாள் அதையென்னும்
ஆண்மைக் குரலிங் கெழவேண்டும்.

இதனை எண்ணித் தானிங்கே
ஏங்கித் தவிக்கும் நெஞ்சுடனே
கதறிக் கதறி அழுகின்றேன்
கண்ணீர் சொல்லும் கதையிதுகாண்.

பிறவா தார்க்குக் கவலையில்லை
பிரிந்தார் தமக்கும் கவலையில்லை
பிறந்தார் தம்மிற் கவலையிலார்
பேசுந் தெய்வம் அவரன்றே.
மண்ணின் அவலம் அதைப்பார்த்து
மனத்துட் குமுறும் எனக்கிங்கே
கண்ணீர் மட்டும் இருக்குமெனில்
காலம் முற்றும் நானழுவேன்.

# ஒரு பாடல் வேண்டும்!

(திருச்சி பாரதன்)

பல்லவி

ஒருபாடல் நான்பாட வேண்டும் — முருகா
உளமகிழும் தேனாக அதுமாற வேண்டும் (ஒரு)

அனுபல்லவி

அருள்பொங்கிப் பாய்ந்தோட வேண்டும்
அழகாகவுன் சீர்பாதம் அதுகூட வேண்டும் (ஒரு)

சரணங்கள்

மயிலோடு மானிரண்டு குதித்தாட வேண்டும்
மலையாவும் சூழ்ந்தங்கு எழிலாக வேண்டும்
குயில்நாணிப் பாராட்டி சுதிகூட்ட வேண்டும்
குறுநாவில் வேலாநீ வளமூட்ட வேண்டும் (ஒரு)

உலகத்தின் துன்பத்தின் இருள்நீக்கி நாளும்
உருவாகும் நல்லெண்ணத் திறன்சேர்த்து வாழும்
நிலைசொல்லத் தன்னைத்தான் உணர்கின்ற நெஞ்சம்
நிலையாகக் தாகந்தா எனக்கசிந்தே கெஞ்சும் (ஒரு)

எழுத்தாளன்

கனவு 11] கீலக, ஆவணி (15-8-68) [கற்பனை 8

# சுதந்திர வாழ்த்து

இயற்கையின் படைப்பில் எத்தனை எத்தனையோ, செடி, கொடி, மரம் வகைகள். தாவரங்களின் சிறந்த அங்கம் மலர்கள் எனச் சொல்லலாம்.

சில தாவரங்கள் பகலில் மலரும் மலர்களையுடையவை. பகலில் மலரும் மலர்கள் அனைத்தும், ஒவ்வொன்றும் தனித்தனி வடிவமும், வண்ணமும் கொண்டு கண்டோர் கருத்து தம்பால் ஈர்க்கும் தன்மையோடு காற்றில் அசைந்தாடி களிநடம்புரிகின்றன.

சில தாவரங்களின் மலர்கள் இரவு நேரத்தில் தான் மலர்கின்றன. இவை அனைத்தும் வெள்ளைநிற முடைய மலர்களாகத் திகழ்வதோடு, மணம் நிறைந்ததாகவும் விளங்குகின்றன. தன் மணத்தால் மற்றோரைத் தம்பால் ஈர்க்கும் தன்மை இவ் வெண்மை மலர்களுக்கு ஏகபோகமான உரிமையாயிருக்கிறது.

மனித மனத்தை மலர்களுக்கு ஒப்பாக நம் முன்னவர்கள் உவமித்திருக்கிறார்கள். சிலர் பகலில் மலரும் மலர்களைப்போன்று தமது தோற்றத்தாலும் அதிகாரத்தாலும், அந்தஸ்து மற்றும் உள்ள சூழ்நிலையால் பிறரைத் தம்பால் கவரும் ஆற்றல் பெறமுடிகிறது.

சிலர் எவ்வித அந்தஸ்து, அதிகாரம், ஆடம்பரம் எதுவும் இல்லாவிட்டாலும், தம் நடத்தையால், கல்விச் சிறப்பால் உற்றவர், சுற்றத்தவர்க்கு உதவும் பான்மையால், இரவு நேரத்தில் மலரும் மலரைப்போன்று இருந்தாலும், பண்பால் உயர்ந்து விளங்குபவர் ஆகிறார்கள்.

இருளில் வெண்மை உதயமாகும். வெண்மை மலரும்போது மணம் கதுவும். எனவேதான் மனிதன் வெள்ளை மனம் படைத்தவனாக வாழ்தல்வேண்டும் என்று அனுபூதிமான்கள் சொன்னார்கள்.

அன்றாட வாழ்வில் இயற்கை எத்தனை வகையில் நமக்கு வாழக் கற்றுக்கொடுத்து வருகிறது. இன்னது தான் அது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் அறிஞர்கள் ஆகிறார்கள். அறிந்தவர்கள் அனுபூதிமான்களாகிறார்கள். அனுபூதி அடைந்தவர்கள் ஞானிகளாகிறார்கள். ஞானிகளை பாரம்பர்யமாய் பெற்ற நாடு பாரதநாடு.

மலர்களால் தாவரங்களுக்குச் சிறப்பு. மனதால் மனிதனுக்குச் சிறப்பு. மலர்கள் வம்சாவளியை வளர்க்கும் அங்கமாக இருப்பதுபோல, மனித மனமே பாரம்பர்யத்தை வளர்க்கும் அங்கமாக இருக்கிறது.

மலருக்கு இயற்கையாக மணம் இருப்பதுபோல, மனதுக்கும் இனிய மணம் இருக்கிறது. அழுகிய மலர்களில் நாற்றம் இருப்பதுபோல, நைந்த மனதிலும், தீய எண்ணங்கள் உதயமாகும் போதும் மனதில் நாற்றம் எழுந்து இயற்கையாயுள்ள மணத்தைத் தடுத்து விடுகிறது.

தீய எண்ணங்கள் மனதில் இடம் பெறாமல் செய்துவிட்டபோது மனதும் எப்பொழுதும் மணம் நிறைந்ததாக இருக்கும், "மாசற்ற கொள்கையை மனத்தில் அடைந்தக்கால் ஈசனைக் காட்டும் உடம்பு" என்று தெளிவாகக் கூறுகிறார் ஔவை பாட்டி.

மக்கள் மனதில் தீய எண்ணங்கள் புகாமல் தடுக்க எழுந்த முயற்சிதான், அரசியல், சமயம், இலக்கிய வாழ்வுக்களாகும். இதனை மூன்று வகையாக முன்னவர்கள் வகுத்தார்கள். வென்று வாழ்தல், வகுத்து வாழ்தல், வழங்கி வாழ்தல் என்பனவாகும் அது.

அரசியல்துறை மனிதனை வென்று சட்டத்தின் மூலம் தீய எண்ணங்கள் மனதில் புகாமல் காவல் துறையை ஏற்படுத்தி, நீதிமன்றத்தையும், சிறைக் கூடத்தையும் உருவாக்கி மனிதனை மனிதனாக வாழ வழிவகுத்தது.

சமயத்துறை, இருப்பவன் இல்லாதவனுக்குக் கொடுத்து, நாட்டில் நல்லறங்கள் நடைபெறச் செய்து, சத்திரம், சாவடி, பாடசாலை, மருத்துவ நிலையம் தோற்றுவித்து சமுதாயத்தில் குவிந்துகிடக்கும் எதையும், வகுத்து வாழ்தல் மனித தர்மம் என்று மனம் இளகி செயல்படுத்த வைத்தது.

இலக்கியத்துறை, மனிதன் எண்ணத்தால் உயர்வு பெறுவதையும், எண்ணத்தால் தாழ்வு பெறுவதையும் எடுத்துக்காட்டி, எப்படிச் சொன்னால் சாதாரணமான மனிதன் மனத்தில் இது இடம் பெறும் என்று சிந்தித்து சிந்தித்து அந்த சிந்தனை வேள்வியில் தன்னையே பூர்ணாகுதி பொருளாக்கி மனித மனத்தில் சோகத்தையும், துக்கத்தையும், ஆச்சர்யத்தையும், ஆவலையும் தோற்றுவிக்க தன்னையே அர்ப்பணித்து மனித சமுதாயத்தை உயர்வு பெறச் செய்வதாக அமைகிறது.

இந்த மூன்று வழிகளிலும் லட்சியம் ஒன்றுதான். மனித மனம் மணம் நிறைந்த மலராக மலரச் செய்ய வேண்டும் என்பதுதான். மணம் நிறைந்த மனம் பெற விரும்புகிறவர்களுக்கு தடையாக இருப்பது "நான்" என்ற அகங்காரமாகும்.

"நான்" போனால் மனம் நாற்றமற்று நன் மணம் நிறைந்ததாக அமையும். நான் என்னும் மாய மனிதனை வெருட்ட முனையும் போரில் தான் போனால் போகட்டும் என்று தீரத்துடன் வாழ்கின்ற சிந்தனைச் செல்வன் "எழுத்தாளன்."

"மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்ற சொல்லுக்குள் மனமது செம்மையாக மந்திரம் ஜெபிக்கவேண்டும் என்ற கருத்தும் அடங்கியிருக்கின்றதல்லவா?

மனது தூய்மையுடையதாக வைத்திருப்பது வாழ்வில் பெறக்கூடிய சிறந்த பேறு. என்னில் இறைவன் எழுந்தருளியிருக்கிறான் என்ற எண்ணம் நான் நிறைவுடையவன் என்பதை வலுப்படுத்தும். நிறைவுடைய மனத்தில் தூய்மை, வாய்மை என்ற இரு மலர்கள் மலரும் அம்மலர்கள் உள்ளத் தடாகத்தில் மலருபவை. அவை மணம் நிறைந்தவை, அருள் நிறைந்தவை. மனிதர்களை மட்டுமல்ல, வண்டுகளை மட்டுமல்ல, எல்லாம்வல்ல இறைவனையே தம்பால் ஈர்க்கும் ஆற்றல் படைத்தவை.

தமிழ் மக்களின் உள்ளத் தடாகத்தில் தூய்மை, வாய்மை ஆகிய இரு மலர்கள் மலர நிறைவுடைய மாந்தர்களாக அவர்கள் வாழவேண்டும் என்றும், அதுவே அவர்கள் சுதந்திரம் அடைந்ததற்கு வழியாகும் என்றும் அத்தகைய நிறைவாழ்வு சித்திக்க சுதந்திர தினத்தில் தமிழ் எழுத்தாளன் அனைவரையும் வாழ்த்துகிறான்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 10. பாரதியும்—பாரதியும்

(கி. முத்துராமகிருஷ்ணன்)

★

எட்டயபுரம் புவி மன்னர் பரம்பரையைச் சார்ந்தது என்பது தமிழ் உலகு கண்ட ஒரு உண்மையாகும். அதே எட்டயபுரத்தில் கவி மன்னர்கள் பலர் வாழ்ந்து மறைந்த வரலாறுகளும் தமிழகம் ஒப்புக்கொண்ட ஒரு உண்மையுமாகும். அந்த நிலையில் எட்டயபுரத்தினை அணிசெய்த இரு பெரும் புலவர்களின் சில வாழ்க்கைக் குறிப்புகளை தமிழ் மக்களுக்கு கூறிக்கொள்ள ஆசை கொள்கிறேன்.

சுப்பிரமணியன் என்ற சிறுவன் சுப்பையா என்ற பெயரில் ஊரில் உலவுகிருன். சோமசுந்தரம் என்ற பாலகன் சோமு என்ற பெயரில் திரிகிருன் இவர்கள் இருவரும்தான் இன்று தமிழகம் போற்றி வணங்கி வாழ்த்தும் மாபெரும் மேதைகளான பாரதியும் நாவலருமாகும்.

பாரதியும் நாவலரும் பள்ளித் தோழர்கள். இவர்கள் மன்னர் உயர்நிலைப்பள்ளியில் படித்தார்கள். அது சமயம் அவர்கள் இருவருமே கற்பனை உலகில், காவியப் பூங்காவில், இலக்கியச் சோலையிலே விளையாடுவார்கள். அவர்கள் விளையாடிய பிள்ளையார் படித்துறை தென்னந்தோப்பு, கோவில்கள் இன்றும் உள.

அதன் பின் இருவரும் நெல்லை சென்று கல்வி பயின்ருர்கள். சுப்பையா, பாரதி பட்டம்பெற்ருர். சோமு பட்டம் இன்றிப் படித்து வந்தார் இருவருமே கவிகள் இற்றிவந்தனர். இருவருமே ஒருவர் இயற்றிய கவிதையை மற்றவருக்கு காட்டி இன்புறுவது உண்டு. ஒரு சமயம் பாரதியாரின் கவிதை மிகச் சிறப்பாக இருந்தது. அதுபோல தான் இயற்ற இயலவில்லையே எனச் சோமு ஏங்கினுர். பாரதி இயற்றிய கவிதை, செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்பதுதான். இதனைக் கண்ணுற்ற சோமு, அப்பா சுப்பையா, நான் இனிக் கவிதை இயற்றுவதில்லை என்று முடிவாகக் கூறினுர். நாவலர் அது சமயம் ''மாரிவாயல்'' என்ற கவிதை நூல் ஒன்று எழுதிவந்தார். அதனைக் கண்டு பாரதியார் இதனை யாவது முடித்துக் கொடுக்கும்படி கூறினுர். நாவலர் கட்டாயமாக மறுத்துவிட்டார்கள்.

வானில் காற்று திசைமாறி அடிப்பதுபோல் இருவர் வாழ்க்கையிலும் திருப்பம் ஏற்பட்டது. பாரதியார் படித்து முடித்து காசி சென்ருர். இவரது வாழ்வு தேசிய இயக்கமாக பரிணமித்தது.

நாவலர் படித்துப் பட்டம்பெற்று வக்கீலாக தூத்துக்குடியில் தொழில் புரிந்தார்கள். அது சமயம் தூத்துக்குடி வந்த பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளையைக் கண்டு கப்பல் ஓட்டுவதுபற்றி பேசினுர். நாவலருடன் சில நாள் தங்கி மறுபடியும் சென்னை சென்று விட்டார்.

பாரதியாரின் வாழ்க்கை புத்தகமாக வந்துள்ளதினுல் இதனை விரிவாக எழுதாது விட்டுவிடுகிறேன். பாரதியார் 11—2—1921ல் அமரரானுர். தமிழகம் – தமிழ் உலகம் கண்ணீர் உகுத்தது.

நாவலர் அவர்கள் 1905ல் சட்டம் பயின்ருர். 1913ல் M. A. தேறினுர். 1905 முதல் 1920ம் வருடம் வரை தூத்துக்குடியில் வழக்கறிஞராக பணிபுரிந்தார். தேசிய இயக்கத்திலும் ஈடுபாடு கொண்டார். பின் மதுரை சென்ருர். 1933ல் தன் சொந்தக் கிராமமான உசிலங்குளத்தில் ஒரு ஆரம்பப்பள்ளியை வ. உ. சிதம்பரம் பிள்ளையைக் கொண்டு துவக்கிவைக்கச் செய்தார்.

1935ல் எட்டயபுரத்தில் 'தமிழ் அகம்' என்ற பெயரில் ஒரு புதிய மனைகட்டுவித்தார். அதுதான் இன்று அவருக்கு உள்ள நினைவுச் சின்னம்.

1926ல் C. R. தாஸ் மதுரை வந்த சமயம் இவர்கள்தான் அவரது ஆங்கிலப் பேச்சை தமிழில் மொழி பெயர்த்தார்கள். தேசிய இயக்கத்திலும் அதே சமயம் இலக்கியத்திலும் அதிக ஈடுபாடு கொண்டார்கள்.

கம்பனில் ஒரு புதிய மாற்றம் கண்டார்கள். தசரதன் குறையும் கைகேயி நிறையும் என்ற திறனுய்வுக் கட்டுரை எழுதி அந்நாளில் இலக்கிய வானில் புதிய ஒளி வீசினுர்கள். 1933 முதல் 1938 வரை சிதம்பரம் அண்ணுமலை பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராக பணி ஆற்றிய சமயம், இவரது மாணுக்கர் சிலர், இவருடைய 'மாரிவாயிலைக்' கண்டனர். முற்றுப் பெருத காப்பியம் இதனை முடிக்கக் கோரும் சமயம், ஷ சபதம் பற்றிக் கூறினுர்கள். நண்பர்கள் விருப்பத்திற்கிணங்கி பின்பு மாரிவாயிலைப்பாடி பூர்த்தி செய்தார்கள். இச்செய்தியை நாவலர் அவர்கள் என்னிடம் நேரிலேயே கூறினுர்கள்.

31—12—1944ல் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் பாரதியாருக்கு நாவலர் பட்டம் தந்தது. இலங்கை மக்கள் நாவலரை பலமுறை அழைத்து சிறப்புச் செய்துள்ளார்கள்.

எட்டயபுரத்தில் தேசிய கவி பாரதியாருக்கு மணி மண்டப திறப்புவிழா 12-10-47ல் கோலாகலமாக நடைபெற்றது. இவ்விழாவினை மேதை கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னின்று நடத்தினுர்கள். சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் மணிமண்டப திறப்புவிழா செய்தார்கள். நாவலர் அதில் கலந்துகொண்டு பேசினுர்கள். பாரதியைப் பற்றிப் பேச தனக்கு தனி உரிமை உண்டு என்று கூறி, பாரதிக்கு இந்த விழா எடுப்பது மேன்மையானது ஆசியாவிலேயே ஒரு கவிஞனுக்கு இப்படிப் பட்ட பெருவிழா திருவிழா நடந்ததில்லை. இதனைக்கண்டு நான் பூரிப்பு அடைகிறேன். காணிநிலமும், தென்னை மரமும், பளிங்கு மண்டபமும் கேட்ட பாரதிக்கு அது கிடைத்தது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன் என்று பெருமிதத்துடன் பேசினுர்கள்.

6-ஆம் பக்கம் பார்க்க

*A Georgian Short Story :*

# HANDS

By ELISHER KIPIANI

Elisher Kipiani (b. 1924) became known for his collection of short stories entitled "The Girl Who Had Never Seen the Sea."

Elisher Kipiani mostly writes about the present day. He has a laconic style, his own manner of composition, and his plots are full of unexpected turns. In this respect his stories have a certain likeness to O'Henry's.

In addition to short story writing, Elisher Kipiani is working on screenplays, satirical and humorous pieces, feature stories and articles for Georgian newspapers and magazines.

Melano is one of those homely girls you never notice unless they speak to you. Nor would you look twice at her in the street. She is a plain, even an ugly girl. But suppose you are walking along the pavement. Some girls are talking behind you. One voice is different from all the others — a voice that strikes the heart as well as the ear. You turn around and see plain, dumpy Melano with her long nose. It has to be Melano, for no other voice would make you look round. It is a standing joke among her friends that she will get married only when she can get someone to propose over the phone or when there's an eclipse of the sun.

Melano is only twenty-one. Long ago she learnt to dream fantastic dreams. If the boys could see the vision of herself she saw in her day dreams, they would all be bewitched.

Melano makes no attempt to improve her looks. It never occurs to her to have her hair waved, use lipstick or manicure her nails. She thinks these are privileges only for beautiful girls.

The other day, a newsreel cameraman came to the spinning mill with his assistant and an operator. They brought the large, one-legged projectors into the shop and set up the tripod-mounted camera.

The long-necked cameraman and the foreman arm in arm paced slowly between the rows of looms, as if they were on an inspection. The cameraman studied the weavers casually but what he told the foreman was lost in the noise of the shop.

Finally they stopped near Melano's loom. Melano did not raise her head but felt that the foreman was pointing to her, since she was a model worker, and her heart beat fast. She did not know whether to look up or to go on working.

But suddenly, as if he had been called by someone, the cameraman turned and went to Tsiala's loom. Tsiala is fair, blue-eyed, frail and graceful. Everyone at the factory including Vasso is a little bit in love with her. And in Melano's day dreams of beauty, the image more often than not looks like Tsiala.

"Let's take a picture of this girl," Melano heard the cameraman say. Perhaps she did not hear the words, but just guessed what he said.

Thump, thump.

The shuttle echoed the beating of Melano's heart. Like the interweaving of the threads, Melano's thoughts raced along.

"Is only beauty important?" she wondered.

Thump, thump.

"Does nothing else count? Only being beautiful?"

Thump, thump.

"I don't hurt anyone...I do the best I can at work, and want everybody to be happy. What more can I do?"

Suddenly Melano noticed that the thread zigzagged in the air and disappeared. The flaw showed in the fabric like a black wedge gradually expanding. She promptly switched off the loom and found the ends of the broken thread. Her fingers moved of their own accord, as if they could see.

They picked the threads up, quickly tied together the loose ends, passed them through the shuttle and the teeth of the comb. The shuttle began to work again, snatched the split thread and wove it without a trace, into the rustling white fabric.

Melano was deep in thought, if that obsessive question to which she failed to find an answer could be called thought.

It was less thought than a pain smouldering like a fire deep within her, so deep that she could not get at it to put it out. It was the pain of a woman to whom nature had given a beautiful soul but an ugly face.

Suddenly a dazzling light blinded Melano. The lights had turned on her, and she felt as if her cheek was scorched. Her loom lit up and glittered, the silk threads shone.

Someone touched her on the shoulder. "We're going to photograph you now," the cameraman shouted in her ear, turning the camera towards her.

"How silly I am", she thought, "and so jealous!"

"I saw how quickly you tied together the broken thread," the cameraman was shouting. "Do it again, please."

"Do it again? How can I?" Melano was confused.

"Break the thread," foreman cried into her ear, "and tie it up again. We want to film it,"

The camera came to life, and so did the cameraman. He fussed around Melano, taking distant shots

and close-ups. Finally he photographed her hands only, as they tied the thread. He shot a lot of film. It seemed to her that it would never end.

"A stupid, envious, jealous thing. That's what I am...stupid...envious ......jealous, that's what I am...... stupid...envious - stupid....envious."

Thump thump.

"Melano, you told me they took a picture of you but I didn't see you in the newsreel," a neighbour said to Melano when she came home from work.

"Wasn't I in it?" Melano blushed.

"No, they mention your name but they don't show you," the woman said maliciously.

"Where did you see it?" Melano asked, trying to hide her embarrassment and appear casual.

That evening Melano went alone to the cinema. She sat in the last row of the balcony. Before the show began, she looked around afraid of being seen by some of her work—mates. She could not have said why she wanted to avoid them.

The lights went out, and appeared the gate of the Tbilisi Silk-Weaving Mill. Suitable background music, the announcer began to praise the workers' successes. And then he mentioned Tsiala...

Tsiala smiled from behind part of her loom. Her hands were not visible, but it was clear that she was at work. Her profile appeared and then her face completely filled the screen. Tsiala smiling sweetly faced the hall, her huge eyes fixed on Melano.

Melano grinned back at her friend but a sadness gripped her heart and she was filled with anxiety...Then Melano's own face appeared, though only for a moment. Her heart skipped a beat; her breath stopped. She could not be sure that it really was her, but it must have been since the announcer mentioned her name and praised her work, adding that Melano was remarkably skilful, and that her fingers had marvellous dexterity.

Then her fingers appeared, tying up a broken thread with lightning speed. They were shown again, moving much more slowly. Again they found the broken ends of the thread, tied them together, and passed them through the shuttle. Melano realised it was done slowly, so that all the details could be seen.

The fingers moved about like dancers, snatching up the thread ends, curving gracefully, following the rhythm of the music.

Good Lord! Were those fingers hers? Did she really have such dainty and slender fingers? And how the announcer spoke of them! Melano herself marvelled at their suppleness. Were they really hers? Yes, they belonged to her, but in the film they seemed much slenderer and prettier than usual.

Melano could not help looking down at her hands. She saw their outline faintly in the dark, ten fingers resting on her knees.

It suddenly occurred to Melano that her hands were as pretty and as charming as Tsiala's eyes and face.

It had been raining and the Rustaveli Avenue glittered like a mirror in the street lights. Melano walked all the way home.

She looked into a large window and stopped. Inside, a beautiful young girl sat at a small table beside a mirror-lined wall. Her long tapering fingers were stretched out before her. A woman in a white gown was spreading pink varnish on her nails.

A sharp desire stabbed Melano's heart. She looked at her own hands and fingers again.

She pushed open the door and casually slipped into the mirrored room.

---

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

நாவலர் அவர்களை மதுரைத் தமிழ்ச் சங்கமும் பாராட்டத் தவறவில்லை. ஏனென்றால் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தமிழ்ச் சங்கம் துவக்கியதை ஆதரித்தவர் பாரதியார். அதனால் இவர்கள் 17—1—54ல் அதன் சார்பாக கணக்காயர் பட்டம் பெற்றார்கள்

9—2—1955ல் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்தது. மதுரையில் 27-7-59 அன்று நாவலர் 80வது வயது பூர்த்திவிழா நடைபெற்றது. 14-12-59 அன்று நாவலர் அவர்கள் அமரரானார்கள். பாரதியாரை இன்றும் பசுமலை பாரதியார் என்று கூற, ஏன் எழுதவும் காண்கிறேன்.

நாவலர் அவர்களுக்கு பசுமலையில் மலையகம் என்ற வீடு உள்ளது. தனது பிற்கால வாழ்க்கையை அவர்கள் அங்கு அமைதியாக கழித்தார்கள். ஆனால் அவர்களை எட்டயபுரம் பாரதி என்று சொல்வதுதான் சிறப்பு என்பது என் எண்ணம். இதனையே தமிழ் மக்கள் செய்வார்களாக. நாவலர் அவர்கள் சேரர் பேரூர், சோர்தாயர்முறை, மங்கலக் குறிச்சி பொங்கல், திருவள்ளுவர் காலம் என்ற பல நூல்கள் எழுதி உள்ளனர்.

எட்டயபுரத்தில் 1938ல் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் பேசிய சமயம் இவர்கள் மீது எதிர்ப்பும் கிளம்பியது பின்பு கம்பரைக் காயும் வீம்பு என்று எழுதி கம்பன் புகழினை நிலைநாட்டினார்கள்.

எட்டயபுரம் மக்கள் பாரதியாரை வரவேற்க தவறவில்லை. மன்னர் உயர்நிலைப்பள்ளியில் தனது புத்தகமான 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' என்பதுபற்றி பேசினார். மக்கள் மெய்மறந்து கேட்டனர். மன்னர் உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு பல சமயம் அறிவுரை கூறினார்கள். இதனால் அவர்கள் பேசும் சமயம் தமிழன் ஒருவன் தன் பிறந்த ஊரிலே பாராட்டப்படுவது கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். இந்தியப் பண்பாடு அதிகம் வளரவேண்டும் என்று கூறினார்கள். பாரதி மணிமண்டபம் கட்டவும் பல உதவிகள் செய்துள்ளனர்.

பாரதியார் இருவரின் பெருமையும் எட்டயபுரத்திற்கு என்றும் உண்டு. பாரதியாருடன் நெருங்கிப் பழகி பாரதியாரின் அளவு இலக்கியச் செறிவும் கல்வியும் பெற்ற நாவலர் பாரதியார் அவர்களின் திருவுருவப் படம் ஒன்று இவ்வாண்டு 11-9-1968 அன்று நடைபெறும் பாரதியார் விழாவில் திறந்துவைப்பார்கள் என்றால் தமிழ் மக்கள் மிக்க கடப்பாடு உடையவர்களாக இருப்பார்கள் என்று மனம் விட்டு கூறிக்கொள்கிறேன். வாழ்க பாரதி நாமங்கள்.

# ★ ஜீவ காந்தா ★

—[எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு]—

(சென்ற மாதத் தொடர்ச்சி)

மைசூர் தசரா வேடிக்கையைப் பார்க்கச் சென்ற சீதாபதி பெங்களூரில் தனவந்தரான நாகபூஷண நாயுடுவின் வீட்டில் தங்கியபோது அவரது குமாரத்தியும் இவனும் சந்தித்துக் காதல் கொண்டனர். அதன் மூலம் மாதவனின் குடும்பத்துக்குப் பெரிய அதிர்ஷ்டம் வரும்போலிருந்தது. நாகபூஷண நாயுடு தன் ஏக குமாரத்தியை முப்பதினாயிரம் ரூபாய் சொத்துக்களுடன் சீதாபதிக்குத் தர ஒப்புக்கொண்டு மாதவனுக்கு எழுதினார். மாதவனும் அதற்கு சம்மதித்து விவாகத்திற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டு இதைப்பற்றித் தன் அண்ணா கேசவலு நாயுடுவிடம் சொல்லி அவரை விவாஹத்திற்கு அழைக்கப் புறப்பட்டான். அத்துடன் மற்றொரு வலைவீசவும் எண்ணினான். கேசவலு நாயுடுவுக்கு இரத்த சம்பந்தமான நெருங்கிய பந்துவாய் பெரிய பணக்காரரான அழகிரிசாமி நாயுடு என்ற ஒருவர் கும்பகோணத்தில் வசித்து வந்தார். அவர் வெகுகாலம் சிங்கப்பூர் பினாங்கு பக்கங்களில் வியாபாரங்கள் செய்துவிட்டு, ஏராளமான திரவியத்துடன் கும்பகோணம் வந்து, நிலங்கள் வீடுகள் வாங்கி, அலமேலு என்கிற பெண்ணை விவாகம் செய்துகொண்டு சுகமாயிருந்தார். அவருக்குக் குழந்தைகளேயில்லை. எந்த சங்கதிக்கும் கேசவலு நாயுடுவைக் கேட்டே நடப்பவர். மாதவன் தனது அண்ணா கேசவலு நாயுடுவைத் தூண்டிவிட்டு சீதாபதியை சுவீகாரம் எடுத்துக் கொள்ளும்படி அழகிரிசாமி நாயுடுவுக்குச் சொல்லச் செய்தால், அந்தப்படியே அழகிரிசாமி நாயுடுவும் செய்துவிடக் கூடுமாதலால், இதைப் பற்றித் தன் அண்ணாவிடம் பேசிச் சரிப்படுத்தி விடலாமென்று தீர்மானித்துக் கொண்டு, அதற்காக முதலில் கும்பகோணத்துக்குச் சென்று, அழகிரிசாமி நாயுடுவைக் கண்டு தனது குமாரன் சீதாபதியை சுவீகாரம் எடுத்துக்கொண்டால் சொத்துகள் வெகு பத்திரமாயிருக்கும் என்று சொன்னான்.

அழகிரிசாமி நாயுடு:-உங்கள் குமாரன் அவ்வளவு யோக்கியனல்ல. நான் சிங்கப்பூரில் வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தபோது என் சம்ரக்ஷணையில் சில மாதங்கள்வரை சீதாபதி இருந்ததால் அவன் குணங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அது கிடக்கட்டும். என் நெருங்கிய பந்துவான உங்கள் அண்ணா கேசவலு நாயுடு இந்த சுவீகாரத்துக்கு ஒப்புக் கொண்டால், அப்படியே நடத்திவிடலாம். என் சொத்துக்களுக்கு முன்பே ஒரு உயில் எழுதிவைத்திருக்கிறது. அது இன்னும் ரிஜிஸ்தராகவில்லை. உங்கள் அண்ணாவை அழைத்து வந்தால் எல்லாம் பேசி முடிப்போம்.

மாதவன்:—முன்பு எழுதிய உயிலைக் காட்டுங்கள். படித்துப் பார்க்கலாம்.

அழகிரிசாமி நாயுடு:—முதலில் கேசவலு நாயுடு சுவீகாரத்துக்கு சம்மதிக்கட்டும். அப்பால் நீங்கள் உயிலைப் பார்க்கலாம். அதற்குள் அவசரமா? இன்னொருவருடைய சொத்துக்கு இவ்வளவு ஆவலா?

மாதவன்:—என் அண்ணாவை நீங்கள் இவ்வளவு மேன்மையாகப் பேசுவதைக்கேட்க எனக்கு வெகு சந்தோஷமாயிருக்கிறது ஒரு நிமிஷத்தில் என் அண்ணாவின் உத்தரவை வாங்கி வருகிறேன். அப்புறம் ஆக்ஷேபணையுண்டா?

அழகிரிசாமி நாயுடு:— உங்களின் அண்ணா உத்திரவு கொடுத்துவிட்டாலும் சரி, அல்லது நீங்கள் உங்கள் பிரியப்படி எப்படியாவது செய்து கொள்ளுங்கள் என்று சொல்லி எந்தத் தடையும் அவர் செய்யாமல் சும்மா ஒதுங்கியிருந்து விட்டாலும் சரி, நான் சீதாபதியை சந்தோஷமாய் சுவீகாரம் எடுத்துக் கொள்கிறேன் என்றார். மாதவன் இதைக் கேட்டு சந்தோஷப்பட்டவனாய் கும்பகோணத்திலிருந்து நீடாமங்கலம் வழியாக நாகப்பட்டணத்துக்குப் புறப்பட்டான். அழகிரிசாமி நாயுடு பெரிய லௌகீக சாமார்த்தியவானானதால், மாதவனின் மனம் சந்தோஷப்படும்படியான விதமாய்ப் பேசி நல்ல மனிதராக நடந்துகொண்டு அனுப்பிவிட்டார்.

மாதவன் நாகப்பட்டணம் வந்து தனது அண்ணாவைக்கண்டு சீதாபதியின் சுவீகார சங்கதிக்குச் சம்மதித்து, சிபாரிசு செய்யும்படி வேண்டினான்.

கேசவலுநாயுடு:-மாதவா! நாம் ஊரார் சொத்தின்மீது ஆசைப்படுவது சரியல்ல. அழகிரிசாமி நாயுடுவின் உடன் பிறப்பான தங்கையைச் சேர்ந்த பாத்தியஸ்தர்கள் இருக்கும்போது அந்த எளியவர்களுக்குத் துரோகம் செய்து அவரது சொத்துக்களைப் பறிப்பது சரியல்ல.

மாதவன்:—அழகிரிசாமி நாயுடுவுக்கு சீதாபதியை சுவீகாரம் எடுத்துக் கொள்ளப் பூர்ண சம்மதமே. தாங்கள் தடைசெய்யாதிருந்தால் சுவீகாரம் நடந்துவிடும்.

கேசவலு நாயுடு:—மாதவா! இது உன்னுடைய வீண் கனவு. சுவீகாரம் என்பது நடக்கிற சங்கதியல்ல. அந்த எண்ணத்தை விட்டுவிடு.

மாதவன்:—சுவீகாரம் சங்கதிதான் முடியாதென்று சொல்லிவிட்டீர்கள். இப்போது சீதாபதியின் விவாகத்திற்காக உங்களை அழைக்க வந்திருக்கிறேன். அதற்காவது சந்தோஷமாய் ஒப்புக்கொண்டு கூடயிருந்து நடத்திக் கொடுங்கள்.

கேசவலு நாயுடு:— ஆகா! காத்திருக்கிறேன். பெண்ணை எங்கே பேசியிருக்கிறாய்?

மாதவன்:—பெங்களூர் நாகபூஷணம் நாயுடு தனது குமாரத்தியை முப்பதினாயிரம் ரூபாய் சொத்துக்களுடன் சீதாபதிக்குத்தர ஒப்புக்கொண்டிருக்கிறார். பெண் கொஞ்சம் கருப்பு தானாம்.

கேசவலு நாயுடு:— மாதவா! கடைசியில் இந்தச் சாக்கடையிலா காலை வைத்தாய்? வீணாக மோசம் போகாதே. நாகபூஷணத்தின் குடும்ப சங்கதிகள் ஊரெல்லாம் தெரிந்தது. அவர் தன் மனைவியை த்துரத்திவிட்டு ஒரு வண்ணாத்தியை வைப்பாக வைத்துக் கொண்டு அவளிடம் பெற்ற பெண்ணையே இப்பொது சீதாபதிக்குத் தர ஒப்பியிருக்கிறார். அந்தப் பெண்ணைத் தவிர அவருக்கு வேறு சந்ததியில்லாததால் முப்பதினாயிரம் ரூபாயல்ல, ஐம்பதினாயிரம் ரூபாயும் தருவார். இந்த நீசப்பணத்திற்காக உன் ஜாதியைக் கெடுத்துக்கொள்ளப் போகிறாயா? காசு நாளைக்குவரும். ஜாதி வருமா? இதைவிட சண்டாளத்தனம், அக்கிரமம் எங்கேயாவது உண்டா? பெண் கருப்பு என்றும் சொல்லுகிறாய். என் பிராணன்போனாலும் இந்த நீச சம்பந்தத்திற்கு நான் ஒப்பமாட்டேன். என்னை மீறி நீ செய்யத் தொடங்கினால் நான் விவாகத்திற்கு வரமாட்டேன். பிரமாதமான கலகங்களுண்டாகும். இதோடு நமது பந்தத்துவங்கள் தொலைந்துவிடும். தெரிந்துகொள்.

**மாதவன்:**—அண்ணா! இவ்விஷயங்களையெல்லாம் தெரிவித்தும் சீதாபதி ஒரே பிடிவாதமாயிருக்கிறான். தாங்கள் கூட இருந்து விவாகம் நடத்தாவிட்டாலும், விவாக அழைப்புப் பத்திரிகையில் தங்கள் பேராவது போட அனுமதிதரவேண்டும். அவ்வளவுக்காவது உபகாரம் செய்யவேண்டும்.

**கேசவலு நாயுடு:**— தம்பி! விவாஹப் பத்திரிகையில் என் பேர் போட சம்மதிக்கவே மாட்டேன். அத்துமீறி நீ போடுவாயாகில், வேறு விதியில்லாமல் உன்னை முழுதும் எதிர்த்துக் கொள்ளும்படியாகி, நீயாகவே என் பேரைப்போட்ட உண்மையை நமது பந்துஜனங்கள் எல்லோருக்கும் நானே நேரில் தெரிவித்தும், ஒருவரும் விவாகத்திற்கு வராதபடி செய்துவிடுவேன். இது நிச்சயம், சத்தியம்.

**மாதவன்:**—அண்ணா! அவனே ஒரே பிடி பிடிக்கிறான். தாங்களோ சத்தியம் செய்துவிட்டீர்கள். தாங்கள் இல்லாமலும், நமது பந்துக்கள் வராமலும் விவாகம் செய்ய எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் விவாகத்தை நிறுத்திவிடுகிறேன்.

என்று சொல்லிவிட்டுத் தஞ்சாவூர் சென்று தன் குமாரனோடு கூடகலந்து ஆலோசித்து ஒரு முடிவு செய்துகொண்டு, அங்கு இதற்கென்று வந்திருந்த பெண் வீட்டாரிடம் இப்போது குறித்த முகூர்த்தத்தில் கல்யாணம் செய்ய முடியாதென்றும், இரண்டு மாதங்கள் பொறுத்து விவாகம் வைத்துக் கொள்வதாகவும் சொல்லி ஒப்புக் கொள்ளும்படி செய்தனர். ஒரு வாரத்திற்குப் பிறகு மாதவன் சீதாபதியோடு நாகப்பட்டணத்துக்கு வந்துவிட்டுப் போனான். ஆனால், கேசவலு நாயுடுவின் வீட்டிற்கு போகவாவது அவரைப் பார்க்கவாவது இல்லை. எப்பொழுதும் உதவி செய்துவந்து, ஒருபொழுது தன் இஷ்டப்படி நடக்க மறுத்தால் அந்த க்ஷணமே பலத்த விரோதம் உண்டாகிவிடுகிறது. இது உலக சுபாவம்.

இந்த சம்பவங்கட்குப் பிறகு, ஒரு நாள் மத்தியானம் கேசவலு நாயுடு கைது செய்யப்பட்டாரென்று மாதவனுக்கு ஒரு தந்திவந்தது. தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடுமென்பது போல, மாதவன் தன் அண்ணாவின் மீதிருந்த கோபத்தை யெல்லாம் மறந்துபோய் வாய்விட்டலறினான். உடனே நாகப்பட்டணத்துக்கு போக, கேசவரின் பங்களா பாழாய்கிடந்தது. கேசவரின் மனைவி குமுதவல்லி மாதவனைக் கண்டதும் பிரலாபித்தாள். ஐயோ! என் அண்ணா எங்கே என்று மாதவன் அலறினான்.

கேசவர் இருபதினாயிரம் ரூபாய் ரயில்வே கம்பெனியாரின் பணத்தைக் கையாடிவிட்டதாயும், முக்கியமான கணக்குப் புஸ்தகங்களை அவர் மறைத்துவிட்டதாயும், இன்னும் அப் புஸ்தகங்களைச் சோதித்தால் தொகை மேலும் அதிகப்படுமென்றும், அதன் நிமித்தமாகவே அவர் கைது செய்யப் பட்டாரென்றும் மாதவன் தெரிந்து கொண்டு ஏங்கினான். பிறகு வக்கீலுடன் சிறைச்சாலைக்குச் சென்று தன் தமையனாரைக் கண்டு கண்ணீர் பெருக்கி, அண்ணா என்னால் ஏதாவது செய்யக்கூடுமானால் உத்தரவிடுங்கள், அப்படியே நடக்கிறேன் என்றான். அதற்கு கேசவர், "தம்பி, கலங்காதே. நீ கையில் ஏதும் இல்லாதவன். போன மாதம் புது சரக்குகள் வாங்க மூவாயிரம் ரூபாய் கடனாகத் தரும்படி கேட்டாய். என்னிடம் பணம் இல்லாததால் தரக்கூடவில்லை. இவ்வளவு கஷ்டத்திலிருக்கிற நீ எவரிடமும் போய் கடன் கேட்கவேண்டாம். ஜீவாவுக்குத் தந்தி போயிருக்கிறது. நாளை காலையில் சென்னையிலிருந்து வந்துவிடுவான். அவன் ஆகவேண்டிய காரியங்களைச் செய்வான். உதவிக்கு என் நண்பர்களும் இருக்கிறார்கள். நான் ஒரு காசும் தொட்டு அறியேன். எதற்கும் பகவான் இருக்கிறார்" என்று சொல்லிக் கண்களைத் துடைத்துக்கொண்டார். மாதவனும் வீட்டிற்குத் திரும்பினான்.

கேசவரின் குமாரன் ஜீவானந்தம் சென்னையில் டாக்டர் பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருந்தான். அவ் வருஷத்திய பரீக்ஷைக் கேள்விகளுக்கு வெகுதிறமையோடு விடை எழுதிவிட்டு, தான் அதப் பரீக்ஷையில் முதல் தரமாகத் தேறக்கூடுமென்ற சந்தோஷத்துடன் தன் ஜாகைக்கு வந்தான். அப்போது அவன்பேருக்கு ஒருதந்தி வந்தது. பரீக்ஷையில் விடைகள் சரியாக எழுதினாயா வென்று விசாரித்துத் தகப்பனார் தந்தி கொடுத்திருக்கக்கூடுமெனவும், பரீக்ஷைக் கேள்விகள் சுலபமாயிருந்ததால், சரியான விடைகளையே எழுதியிருப்பதாய் பதில் தந்தியனுப்ப வேண்டுமென்றும், அதைப்பார்த்துத்தன் தந்தை அதிகசந்தோஷப் படுவாரெனவும் எண்ணிக்கொண்டு தந்தியை சாவகாசமாய்ப் பிரித்தான்.

ஆ! மனிதனுடைய எண்ணங்கள் எவ்வளவு வியர்த்தமானவை! அடுத்த நிமிஷமோ, நாளையதினமோ, அடுத்த வாரமோ தன் பிராணன் பிரியக்கூடிய நிலையில் விதிசந்தித்துக் கொண்டிருக்கும் போது, அதைஅறியாமல் மனிதன் என்னென்ன தீர்மானங்களையோ செய்கிறான்! எவ்வளவு உலகவியாபாரங்களைத் தன் மனதிற்குள்ளே ஊசலாடவிடுகிறான்! அமாவாசை தாண்ட வேண்டுமென்று வைத்தியர் சொன்னால், 'நாளைதானே அமாவாசை, இவ்வளவு தெளிவாயுள்ள முகம் குணப்படாமல் போகுமா', என்று எவ்வளவு பேர் நினைக்கிறார்கள்? ஆ! கடைசியில் வைத்தியர் வாக்கே பலித்து ஏமாறிப் போகிறார்கள். இன்றிரவு தமது பாக்கியைக் கேட்டுப்போனவரைக் குறித்து நாளை காலையில் எட்டும் சமாசாரமென்ன?—அவர் திடீரென்று மார்படைத்துப் போய் விட்டாரென்பதே! அடுத்த நிமிஷத்தில் வருவது இன்னதென்று மனிதனுக்குத் தெரியக் காணோம். தனக்குவந்துள்ள அன்றைய கடிதங்கள் மேஜை மீது கிடக்க, அதைப் பிரிக்க நேரமின்றிப் பலரிடத்தும் பேசிக்கொண்டிருந்து விட்டு, அப்பால் அக்கடிதங்களைப்பார்க்கும் பொழுது, அதில் ஒரு கடிதத்தில், அவன் வாய்விட்டு அலறிமூர்ச்சிக்கும்படியான சங்கதியிருக்கிறது! இதுவே உலகானுபவம்!

நிற்க, தந்தியை ஜீவானந்தம் பிரித்து வாசித்ததும் தன்னை அறியாமலே கதறி விட்டான். உடனேபுறப்பட்டுவருவதாகப் பயல் தந்தியனுப்பி விட்டு, அன்றிரவு மெயிலில் ஏறி மறுநாட்காலையில் நாகப்பட்டணம் வந்து தன் தாயாரைக் கட்டிக்கொண்டு புலம்பினான். பிறகு வக்கீல் வீட்டிற்குச் சென்று அவருடன் சிறைச்சாலைக்குப் போய் தன்தந்தையைக்கண்டு அலறியவாறு அவர் பாதங்களில் விழுந்தான். எதற்கும்தன் வயிற்றில் பிறந்த குழந்தையொன்று இருக்க வேண்டுமென்பது இதற்கே. கேசவர் தன் குமாரனைத்தேற்றி சகலவிவரங்களும் சொன்னார். (தொடரும்)


## "எழுத்தாளன்"

(மாத இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.

விபரங்களுக்கு : நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு.
திருச்சி-2,


Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.